
# சமய மஞ்சரி

2



ரூபா. 20/-

சமய மஞ்சரி

ஆசிரியர்:
சு. குமாரசாமி
B. Sc., Dip - in - Ed.

○

இதழ்
2

○

விலை
ரூபா 20/-

○

அலுவலகம்;
226, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

# வணக்கம்

''சமய மஞ்சரி'' முதல் இதழுக்கு அமோகமான வரவேற்பு!

அச்சிட்ட அத்தனை பிரதிகளுமே விற்பனையாகி விட்டன. பலர் தங்களுக்குப் பிரதிகள் கிடைக்கவில்லை என்று குறைப் பட்டார்கள்.

மிகவும் சிறந்த கருத்துக்கள் பலரும் விரும்பத்தக்க முறையில் தரப்பட்டிருப்பதாக பலரும் பாராட்டியிருக்கிறார்கள்.

வாசகர்களுக்கு நிறைவைத் தந்ததில் நமக்கும் மகிழ்ச்சிதான்!

அனைவருக்கும் நன்றி!

வாசகர்களின் அன்பும் ஆதரவும் என்றும் வளர்ந்து ஓங்க எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்றார் அப்பர் சுவாமிகள்!

அப்பர் சுவாமிகளின் வாக்குக்கு விளக்க உரையாக அமைந்ததே கண்ணன் தந்த கீதை. ''கடமையைச் செய்: பலனை எதிர்பாராதே'' என்பதுகீதையின்சாரம்.

ஆண்டவன் அருளை முன்னிறுத்தி அதன் வழிச் செயல் பட்டால் எல்லாம் நன்மையாகவே அமையும்!

அரன்தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல்!

அரன் பாதம் நினைந்து, அவன் கருத்தறிந்து செய்யும் காரியம் அத்தனையும் நல்ல பலனையே தரும்.

நல்லது. இந்த இதழ் பற்றியும் உங்கள்கருத்துக்களை எழுதுங்கள்.

— ஆசிரியர்.

★ சைவ சித்தாந்த தத்துவத்தைப் பலரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் ஒரு கூட்டத்தில் விளக்கிய தமது அனுபவத்தைச் சொல்கிறார் பேரறிஞர் கி. வா. ஜ. அவர்கள்! பல வருடங்களுக்கு முன் கலைமகளில் வெளிவந்த கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இது!

# பாலின் சுவையும் சர்க்கரையின் சுவையும் தனியாகத் தெரியும்

— பேரறிஞர், கி. வா ஜ.

கோயம்புத்தூரில் நன்னெறிக் கழகம் என்ற கழகம் இருக்கிறது. அதில் அடிக்கடி ஏதேனும் இலக்கிய விழா நடந்து கொண்டே இருக்கும்.

ஒரு முறை சமய விழா நடை பெற்றது.

பல சமயங்களைப் பற்றிப் பேசப் பல அறிஞர்கள் வந்திருந்தார்கள்.

அத்வைதம், சைவசித்தாந்தம், த்வைதம் என்னும் மதங்களைப் பற்றிப் பேசச் சிலரை அழைத்திருந்தார்கள்.

சைவ சித்தாந்தத்தைப் பற்றிப் பேச நான் சென்றிருந்தேன்.

ஒவ்வொருவரும் முக்கால் மணி பேச வேண்டும்.

நான் பேசி விட்டுப் புறப்பட வேண்டியிருந்தமையால என பேச்சை முதலில் வைத்திருந்தார்கள்.

செயலாளர் ''நீங்கள் முதலில் பேசுகிறீர்கள். அத்வைதம், த்வைதம், சித்தாந்தம் இவற்றைப் பற்றிச் சுருக்கமாக முன்னுரை சொல்லிவிட்டுப் பேசுங்கள்!'' என்றார்

''சைவ சித்தாந்தத்தைப் பற்றிப் பேசவே முக்கால் மணி போதாதே! இதில் மூன்று மதங்களைப் பற்றிப் பேசச் சொல்கிறீர்களே?'' என்றேன்.

''சுருக்கமாகச் சொன்னால் போதும்'' என்றார்.

த்வைதம் என்றால் மோட்சத்தில் ஆன்மாவும் கடவுளும் இரண்டாகவே இருப்பது.

அத்வைதம் என்றால் ஒன்றாகவே இருப்பது.

சைவ சித்தாந்த முத்தி என்பது ஒன்றுமல்லாமல் இரண்டுமல்லாமல் இரண்டறக் கலப்பது.

முதல் இரண்டும் விளங்கும். மூன்றாவது விளங்குவது சற்று அருமை. அப்போது பின்வரும் உவமையைச் சொல்லி அவர் விருப்பத்தை நிறைவேற்றினேன்.

என் வீட்டுக்கு நான்கு பேர்

சாப்பிட வருவதாகச் சொல்லியிருந்தார்கள். பாயாசம் வடை எல்லாம் என் மனைவி செய்திருந்தாள். விருந்தினர்கள் நேரம் கழித்துப் பன்னிரண்டு மணிக்கு வந்தார்கள்.

நாலு பேருக்கு ஆறு பேராக வந்தார்கள்.

அப்போது என் மனைவியிடம் "ஆறு பேர் வந்திருக்கிறார்களே! சாப்பாடு இருக்குமா?" என்று கேட்டேன்.

"எல்லாம் இருக்கின்றன! சமாளித்துவிடலாம்! ஆனால் பாயாசம் தான் கொஞ்சம் குறைவாக இருக்கும். பள்ளிக்கூடத்துக்குப் போன குழந்தைகளுக்குப் போட்டதனால் நாலு பேருக்கு மட்டும் கணக்காக இருக்கும். அதனால் பரவாயில்லை. கொஞ்சம் பாலும் சர்க்கரையும் முந்திரிப் பருப்பும் கொண்டு வாருங்கள். இருக்கும் பாயாசத்தோடு காய்ச்சித் தயார் பண்ணி விடுகிறேன்" என்றாள்.

நான் அப்படியே அந்த மூன்றையும் கொண்டுவந்து கொடுத்தேன்.

அவள் பாயசத்தைத் தயார் செய்து விட்டாள்.

பாயாசத்தில் நான் கொடுத்த மூன்று பொருள்களும் கலந்தன.

பாலும் பாலும் கலந்தன, பாலும் சர்க்கரையும் கலந்தன. பாலும் முந்திரிப் பருப்பும் கலந்தன.

பாலும் முந்திரிப் பருப்பும் சேர்ந்தாலும் அவை தனித்தனியே இருக்கும். இது "த்வைதம்" போன்றது!

பாலும் பாலும் கலந்தன. அதைப் பிரிக்க முடியாது. ஒன்றாகவே கலந்து விட்டன. அதுதான் அத்வைதம்!

பாலும் சர்க்கரையும் கலந்தன. அவற்றைத் தனியே பிரிக்க முடியாது. ஆதலின் இரண்டல்ல! நாக்கில் விட்டால் பாலின் சுவையும் சர்க்கரையின் சுவையும் தனியாகத் தெரியும். ஆதலின் ஒன்றும் அல்ல!

இது தான் இரண்டறக் கலக்கும் சித்தாந்த முத்தியைப் போன்றது!

O

---

# பேதமை அல்லவா?

கடலைக் குடித்த அகத்தியர், புதிய உலகம் ஒன்றைப் படைத்த விசுவாமித்திரர், மிகப் பெரும் அஸ்திரங்களை எல்லாம் தனது பிரம்ம தண்டத்தினால் செயல் இழக்கச் செய்த வசிட்டர் — இவர்கள் எல்லாருமே காலத்திற்கு இரையானார்கள்.

இவர்களுக்குச் சமமானவர்கள் தேவலோகத்திலும் பூலோகத்திலும் ஒரு நாளும் கிடையாது.

இப்படிப்பட்ட இந்தப் பெரியோர்களே காலத்திற்கு இரையாகி விட்டார்கள் என்றால், நாம் மட்டும் என்றென்றும் சிரஞ்சீவியாக இருக்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டு இருப்பது பேதமை அல்லவா?

ஆகையால் இந்த உடல் உள்ள போதே வாழ்வின் உண்மைப் பயனைப் பெற நாம் முயல வேண்டும்.

சங்க இலக்கிய வரிசையைச் சேர்ந்தது. ''பத்துப் பாட்'' டினுள் முதல் பாட்டாக இருப்பது. சங்க இலக்கியம் முழுவதற்குமே கடவுள் வாழ்த்தாக அமைந்திருப்பது. சைவத் திருமுறைகள் வரிசையிலும் சேர்ந்தது.

மக்கள் நாள் தோறும் பாராயணம் செய்யும் நூல்களுள் மிகவும் பழைமையானது திருமுருகாற்றுப் படையே!

இந் நூல் பற்றி சுவையாகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்கிறார் தனது தெளிந்த கருத்தாழம் மிக்க நூல் களின் மூலம் பல லட்சக்கணக்கானோர்க்கு தமிழ்ச் சுவையும் அறிவுச் சுவையும் ஊட்டியவரும் பேராசிரியர்க்கெல்லாம் பேராசிரியராக விளங்கியவருமான டாக்டர் மு. வரதராசனார்!

## முருகன் புகழ் பாடும்

# திரு முருகாற்றுப்படை

திருமுருகாற்றுப்படை என்பது முருகக் கடவுளின் அருளைப் பெற்றவர் ஒருவர் அந்த அருளை நாடும் மற்றவர்க்கு வழிகாட்டுவதாக நக்கீரர் பாடிய பாட்டு.

முன்னூற்றுப் பதினேழு அடிகளால் அமைந்த இதுவே சங்க காலத்தில் பக்தியுணர்ச்சி நிரம்பிய முழுநூல் எனலாம்.

பரிபாடலில் முருகன் திருமால் ஆகியோரைப் பற்றிச் சில பாடல்கள் உள்ளன.

ஆயினும் திருமுருகாற்றுப்படையே நீண்ட பக்திப் பாடலாகச் சங்க இலக்கியத்துள் உள்ளது.

இன்றும் சில குடும்பங்களில் முருகனை வழிபடுவோர்க்கு அது பாராயணத்துக்கு உரியதாக உள்ளது.

அக் காலத்தில் இருந்த முருகன் கோயில்களைப் பற்றியும், வழிபாட்டு முறைகளைப் பற்றியும் அறிவிக்கும் குறிப்புகள் இதில் உள்ளன.

இதில் அமைந்துள்ள இயற்கை வருணனைகளும் சிறப்பானவை.

முதல் பகுதியில் திருப்பரங்குன்றம் என்னும் மலைக் கோயிலைப் பற்றியும், அதைச் சூழ்ந்த இயற்கை வளம் பற்றியும், முருகன் திருக்கோலம் பற்றியும், சூரனுடன் செய்த போர் பற்றியும் விளக்கங்கள் உள்ளன.

இரண்டாம் பகுதியில் முருகனுடைய ஆறு திருமுகங்களின் குறிப்புகளும் பன்னிரண்டு கைகளின் செயல்களும் திருச்செந்தூர் என்னும் தலத்தின் சிறப்பும் விளக்கப்படுகின்றன.

மூன்றாம் பகுதியில் முருகனை வழிபடும் முனிவர்களின் சிறப்பும் பழனியில் வழிபாட்டுக்கு வரும் மகளிரின் இயல்பும் கூறப்பட்டுள்ளன.

நான்காம் பகுதி திருவேரகம் என்னும் தலத்தில் வழிபடுவோரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஐந்தாம் பகுதியில் மலைநாட்டு மக்கள் குரவைக் கூத்து ஆடிச் சேவிக்கும் முறைகள் முதலியன எடுத்துரைக்கப்படுகின்றன.

இறுதியில் ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளும் இடங்களும் அவனிடம் சென்று அருள் பெறும் முறையும் பழமுதிர்சோலையின் அருவியின் சிறப்பும விளக்கப்படுகின்றன.

மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்
பல உடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீங்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையமயிர், காமமொடு
கடுஞ் சிமை கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்

என்னும் அடிகள் முருகனை வழிபடும் முனிவர்களைப் பற்றி விளக்குவன.

''மார்பின் எலும்புகள் எழுந்து தோன்றும் உடம்பை உடையவர்கள், பல பகல் உண்ணாமலே நோன்பால் கழித்தவர்கள். பகைமையும் சினத்தையும் நீக்கிய மனம் உடையவர்கள். எல்லாம் கற்றவர்களும் அறிய முடியாத மெய்ப்பறிவு பெற்றவர்கள். கற்றவர்களுக்கு எல்லையாக வல்ல தலைமை உடையவர்கள். ஆசையையும் கடுங் கோபத்தையும் நீக்கிய ஞானம் உடையவர்கள். துன்பம் சிறிதும் அறியாத மன உறுதி இயல்பாகப் பெற்றவர்கள்'' என்று அவர்களின் இயல்பினை எடுத்துரைக்கின்றார் நக்கீரர்.

நக்கீரர் இயற்கையின் அழகில் மிகவும் ஈடுபட்டவர் என்பதைத் திருமுருகாற்றுப்படை விளக்குவது போலவே அவர் பாடிய மற்றொரு நீண்ட பாட்டாகிய நெடுநல்வாடையும் விளக்குகிறது.

திருமுருகாற்றுப் படையின் தொடக்கத்தில் கதிரவன் எழும் காலைக் காட்சியைக் காண்கிறோம்.

பிறகு திருப்பரங்குன்றம் முதலிய மலைகளின் வனங்களைக் காண்கிறோம்.

பாட்டின் முடிவில் மலையிலிருந்து விழுந்து பாயும் அருவியின் காட்சி நம் உள்ளத்தைக் கவர்கிறது. கடைசி இருபத்திரண்டு அடிகளிலும் அந்த அருவி ஒலி அழகாக அமைந்துள்ளது.

முருகு என்ற சொல்லுக்கு முருகனாகிய தெய்வம் என்ற பொருளோடு அழகு என்னும் பொருளும் உண்டு. அந்தப் பொருத்தம் பாட்டைப் படிப்பவரின் நெஞ்சை விட்டு நீங்காது.

(ஆசிரியர் எழுதிய ''தமிழ் இலக்கிய வரலாறு'' என்ற நூலிலிருந்து)

# திருமுருக கிருபானந்த வாரியார் பதில்கள்

★



**கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் கோயில் நிர்வாகத்தில் பங்கு கொடுப்பது முறையா?**

கார் ஓட்டத் தெரியாதவன் காரை ஓட்டினால் எத்தனை ஆபத்தோ அது போல் கடவுள் பற்றில்லாதவர்கள் அத்துறையில் நிர்வாகம் செய்யப் புறப்படுவது ஆபத்து.

**"வங்கக் கடல் கடைந்த மாதவனை" என்று ஆண்டாள் பாடுகிறாரே, நமது வங்காள விரிகுடாவைக் கடைந்தா அமிர்தம் எடுத்தனர்?**

வங்கம் என்பது கப்பல். கப்பல்கள் ஓடுகின்ற கடலை என்பது அதற்குப் பொருள், திருமால் கடைந்தது பாற்கடல். அங்கே எம்பெருமானது திருவடி வங்கமாக, கப்பலாக நின்று அடியவர்களைப் பிறவிக் கடலைக் கடக்கச் செய்கிறது. ஆதலால் வங்கக் கடல் என்றாள் ஆண்டாள்.

**நான் சிறிது காலம் ஒரு தீய பழக்கத்திற்கு அடிமையாயிருந்தேன்,**

**பின் மனம் திருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். மறுபடியும் அப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு என் வாழ்வே பாதிக் கப்பட்டு விடுமோ என்று அஞ்சுகின்றேன்?**

தீய பழக்கத்தினின்றும் விலகுவதற்கு வச்சிரம் போன்ற மன உறுதி தான் இன்றியமையாதது. பெரியோர்களின் பழக்கம் சிறந்த சாதனை யாகும்,

காவல் துறையினர் ஒருவர் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அறிகின்ற ஒருவன் வீதியில் சிறுநீர் கழிக்கமாட்டான் அல்லவா? அதுபோல் தண்டனை தரக்கூடிய கடவுள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று திட்டவட்டமாக உணர்தல் வேண்டும். அந்த உணர்வு தீய பழக்கத்திலிருந்து நம்மை மீட்கும். ஆகவே ஆன்றோர் தொடர்பும் இறையுணர்வும் மன உறுதியும் வேண்டும். இறைவனை நன்கு உபாசனை புரிதல் வேண்டும்.

அக்கினிக்கு அருகில் பனி அண்டாது. அதுபோல் இறைவனை உள் ளத்தில் உபாசிப்பதனால் தீய பழக்கங்கள தீய எண்ணங்கள் விலகிவிடும்.

**பசுவின் பால் எருமைப் பால் ஆகியவை அம் மாடுகளின் மாமிசக் கலவையுடன் தானே பாலாக மடியில் சுரக்கப்படுகிறது. இப்படி இருக்கும் போது பசும் பால், எருமைப் பால் எப்படி சைவ உணவு ஆகும்?**

பால் புலால் உணவு ஆகாது. இம்சித்துக் கொல்லுவதுதான் பிழை. ஆடு மாடு கோழிகளைக் கதறக் கதறக் கொன்று தின்பது மகாபாவம்!

பால் கறக்காவிட்டால் அப்பால் கட்டிக்கொண்டு பசுவுக்குத் துன் பம் உண்டாகும். உதிரத்திலிருந்து பால் வந்தாலும் அது அசைவ உணவு ஆகாது. கன்றுக்கு இரு மடிகளையும் விட்டு மற்ற இரு மடிகளைக் கறந்து பால் அருந்த வேண்டும். இம்சை செய்வது கொடுமை பால் கறப்பது இம்சை அன்று!

**உலகில் உள்ள மற்ற மதங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இதில் உண்மையான வேதம் எது?**

உலகில் உள்ள எம் மதமும் பெரியார்களுக்குச் சம்மதமாகும். அந் தந்த மதத்தில் உள்ள குருமார்கள் கூறியபடி அந்தந்த மதத்தவர்கள் ஒழுக வேண்டும். ஒரு மதத்தில் ஒழுகுபவர் மற்றொரு மதத்தை நிந்திக்கக் கூடாது, ஒரு கல்லூரியில் பல வகுப்புக்கள் இருப்பது போல் பல மதங் கள் அமைந்திருக்கின்றன.

எல்லா மதங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு ராஜாங்கத்தில் விளங்குவது சைவ சித்தாந்தம். இதற்கு இறைவன் திருமொழியாகிய வேதாகமங்கள் பிரமாணமானது. இதனைத் தாயுமானவர் மிகவும் அழகாகக் கூறுகிறார்; ''மயலறு மந்திரம் சிட்சை ஜோதிடாதி மற்றங்க நூல் வணங்க மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிதன்றோ''

**தெய்வம் ஒன்றே என்பது கற்ற**
**அறிஞர்களின் போதனை ஆனால்**
**திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு,**
**பாலப் பருவத்தில் வஞ்சகம் சூதறியா**
**திருக்கும் போது, அயனும் மாலும்**
**சிவனின் அடி முடியைத தேடினார்கள்**
**என்று பாடியுள்ளார். அயனும்**
**மாலும் என்பவர்கள் யார்?**

மாலும் அயனும் சிவபெருமானுடைய அடி முடியைத் தேடிக் காண மாட்டாமல் திகைத்தார்கள் என்பதன் உட்பொருள் வருமாறு:

திருமால் திருமகளுக்கு நாயகன். பிரமன் கலைமகளுக்கு நாயகன் செல்வத்தின் பெருக்காலும் கல்வியின் முறுக்காலும் கடவுளைக் காண முடியாது. பக்தியினால் மட்டுமே பரம் பொருளைக் காணலாம் என்பது இதன் நுண் பொருள்.

**நாம் நம் விருப்பம் ஈடேறக்**
**கடவுளை வேண்டிக்**
**கொள்கிறோமே, அந்த வேண்டுதலை**
**உடனே செய்து விட வேண்டுமா?**
**நம்மால் இயன்றபோது அப்பிரார்த்தனையைச்**
**செய்யக்கூடாதா? பிரார்த்தனையைச்**
**சிலர் லஞ்சம் கொடுப்பதாகச் சொல்கிறார்**
**களே, இது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

கடவுளுக்குச் செய்து கொண்ட பிரார்த்தனையை நாம் இயன்ற போது செய்யலாம்.

உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் இறைவனிடம் எதையும் வேண்டுதல் செய்து கொள்ள மாட்டார்கள். ஆகவே இறைவனை நிஷ்காமியமாக வழிபடுவதுதான் சிறந்த முறை.

வேண்டுதல் செய்வது முதல் வகுப்புப் படிப்பது போல்! வேண்டுதல் செய்யாமல் வழிபடுவது எம். ஏ வகுப்புப் படிப்பது போல்!

''ஆண்டவனே எனக்கு இதைச் செய்தால் நான் உனக்கு இதைச் செய்வேன்'' என்பது கூடாது!!

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

"அட்சர லட்சம் பெறும் என்று சொல்கிறார்களே, அது பண்டிதமணியின் எழுத்துக்களுக்குத்தான் நன்கு பொருந்தும்! சமயம் என்ற தலைப்பில் அவர் தந்த சிந்தனைகளை முதல் இதழில் வெளியிட்டு இருந்தீர்கள்! மிக ஆழ்ந்த கருத்துடைய நல்ல கட்டுரை! பண்டிதமணியின் கட்டுரையொன்று ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுவது சாலவும் நன்று!" என்று தெரிவித்திருக்கிறார் கந்தர்மடத்தில் வசிக்கும் இளைப்பாறிய கல்லூரி அதிபர் க. நடராசா அவர்கள்!

# அறிவு

அறிவு, அன்பு, அருள் என்னும் மூன்றும் அதிகாலைகள் தோறும் பெரிதும் சிந்திக்கவேண்டியவைகள்.

இராத்திரியில் உறக்கத்துக்குப் போகும் போது அவைகளைப் பற்றிச் சற்றே சிந்தித்துக் கொண்டே உறங்கினால் அதிகாலையில் நித்திரை விட்டு எழும்பும் போது அவை சிந்தனைக்கு வரும்.

அறிவு என்றால் என்ன? என்பது முதலில் சிந்திக்க வேண்டியது, உயிர் அறிவுள்ள பொருள். ஆனால் உதவியின்றித் தானாக ஒன்றையும் அறியமாட்டாது; கண்ணின்றி ஒன்றையும் பார்க்கமாட்டாது; காதின்றிக் கேட்கமாட்டாது.

ஆகவே உடம்பின் உதவி உயிருக்கு வேண்டியிருக்கிறது.

இந்த உடம்பை உதவுவது எது? அதற்கு ஒளி என்று பெயர். உயிர் இயல்பாகவே அறியாமையோடு கூடியது. அதனால் உயிர், தான் தன்னையே இன்னார் என்று அறியாது. அப்படி அறியாமைக்கு இருள் என்று பெயர்.

இருளோடு கூடியிருப்பது போலவே உயிர் ஒளியோடும் கூடியிருக்கின்றது.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடன்" என்று ஒரு மகான் கூறியிருக்கிறார். இங்கே ஒன்று என்பது உயிர். அது ஒளிக்கும் இருளுக்கும் இடனாயிருக்கின்றது.

ஒளி கடவுள். இருளாகிய அறியாமை ஒரு நாளைக்கு உயிரை விட்டு நீங்கலாம். ஒளியாகிய கடவுள் எந்தக் காலத்திலாயினும் உயிரைவிட்டு நீங்காது. ஒளியாகிய கடவுள் உயிரறிவுள் அடங்கி, இருளால் மூடுண்டு கிடக்கின்றது.

ஆனால் ஒளியை இருள் மூடுமா? உயிரறிவைத்தான் இருள் மூட முடியும். கண்ணை மூடுவதால் சூரிய ஒளி மறைவது போல இருள் உயிரை மூடுவதால் ஒளியாகிய கடவுள் மூடுண்டிருக்கிறது. உண்மையிலே கடவுள் இருளால் மூடுண்டிருப்பதில்லை.

இருள் மூடிய உயிருக்கு அதனால் மூடுண்ணாத கடவுள் சரீரத்தை உதவி, அதன் அறிவை விருத்தி செய்கின்றார். உயிர்களாகிய நாம் — நமது அறிவை நம் அறிவுள் நீங்காதிருந்து, விருத்தி செய்கின்ற கடவுளை மறவாமல் — கடவுள் கருத்தறிந்து நமது அறிவை விருத்தி செய்ய வேண்டும்.

கடவுள் கருத்தறிதற்குக் கடவுள் வழிநின்ற மகான்கள் நல்ல வழிகள் வகுத்திருக்கின்றார்கள். நல்வழி இருக்கிறது, நன்னெறி இருக்கிறது, வாக்குண்டாம் இருக்கிறது. ஆத்திசூடி முதல் வள்ளுவர் பரியந்தம் நல்ல வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

''புண்ணியம் ஆம்'' ''பாவம் போம்'' என்பது ஔவையார் வாக்கு. புண்ணியம் செய்யத்தக்கது; பாவம் விலக்கத்தக்கது என்பது கருத்து.

ஒளியாகிய கடவுளின் உபகாரங்களினால், புண்ணியம் இது, பாவம் இது, என்று நாம் அறிய வல்லவர்களாயிருக்கின்றோம்.

புண்ணியம் ஆராயப்படவேண்டியது. ''போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்'' என்பது பெரியோர்கள் வாக்கு.

புண்ணியத்தை ஆராய ஆராய அதில் நமக்கு ஒரு பற்று உண்டாகும். அது நல்லதே. அந்தப்பற்றுக்கு அன்பு என்று பெயர், அதே சமயத்தில் பாவத்தின் தீமைகளை ஆராய்தலினால் அதில் நமக்கு வெறுப்பு உண்டாகும்; அதுவும் நல்லதே.

பாவத்தில் வெறுப்பும் புண்ணியத்தில் அன்பும் உண்டாவது ஒரு நல்ல அறிகுறி. அன்பு வளர்க்கப்பட வேண்டியது. அன்பு வளர வளரப் பாவம் தேயும். பாவம் தேயப் புண்ணியம் மேலும் வளர்ந்து அதில் அன்பு கனியும்.

அன்பு கனிந்த நிலையில் அருள் ஆகும். ''அருள் என்னும் அன்பு ஈன் குழவி'' என்பது திருவள்ளுவர் வாக்கு.

(ஆசிரியர் எழுதிய ''சைவ நற் சிந்தனைகள்'' என்ற நூலில் இருந்து)

---

## அடுத்த பிறவி

பல பேருக்கு மரணாவஸ்தை உண்டாகும் பொழுது இறைவனுடைய நினைவு வருவதில்லை, ''சாகும் காலத்தில் சங்கரா சங்கரா'' என்பது எளிதன்று! அப்பர் சுவாமிகளே ''ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்'' என்று சொல்லும் போது மற்றவர்கள் எம்மாத்திரம்? பல காலம் பழகிய பிரபஞ்சத்தின் வாசனைதான் அந்த இறுதிக் காலத்தில் முன் வந்து நிற்கும்! அப்போது எந்த ஆசை மீதூர்ந்து நிற்கிறதோ அதற்கு ஏற்றபடி அடுத்த பிறவி உண்டாகும்.

— பேரறிஞர் கி. வா. ஜ.

# அருள் வாக்கு

## ஆண்டவன் ராஜ்யத்துக் ‘கரன்ஸி’

முன் காலத்திலே தேசத்தின் ஒரு பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சி நடத்தி வந்தார்கள்.

மற்றொரு பகுதியில் பிரிட்டிஷ் ராஜாங்கம்.

இந்த இரண்டுக்கும் நடுவில் எல்லையாக ஒரு மலை இருந்தது. பிரெஞ்சுப் பகுதியில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான்.

அங்கு ஏற்பட்ட கலவரத்துக்குப் பயந்து கொண்டு பிரெஞ்சு எல்லையைக் கடந்து பிரிட்டிஷ் பகுதிக்குப் போய்விட வேண்டுமென்று நினைத்தான்.

அதனால் அவன் சொத்தையெல்லாம் தங்கமாகவும் வெள்ளியாவுகம் மாற்றிக் கொண்டான்.

மலை ஏறினான்.

மலை உச்சியில் பிரிட்டிஷ் பொலீஸ்காரன் இருந்தான்.

அவனிடம் இந்தப் பாரமான சொத்தையெல்லாம் கொடுத்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் செல்லுபடியாகக்கூடிய நோட்டாக மாற்றிக் கொண்டான்.

பிறகு வெகு சௌக்கியமாக இறங்கிப் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்குப் போய் விட்டான்.

நாமும் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் இந்தப் பூலோக ராஜ்யத்தை விட்டுவேறொரு ராஜ்யத்துக்குப் போகத்தான் போகிறோம். அப்பொழுது நம்முடைய சொத்து எல்லாவற்றையும் அங்கு சுலபமாக எடுத்துக் கொண்டு போக ஒரு ‘‘கரன்ஸி’’ இருக்கிறது.

அது தான் தர்மம்,

நம் சொத்துக்களாகிய உடல் பொருள், ஆவி எல்லாவற்றையும் தர்மம் செய்து புண்ணிய நோட்டுக்களாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

அந்த நோட்டுத்தான் ஆண்டவன் சாம்ராஜ்யத்தில் சொல்லுபடியாகும்.

அந்த நோட்டாக நம் செல்வத்தை மாற்றிக் கொள்வது வெகு சுலபம்.

சரீரத்தினால் பிறருக்கு உபகாரம் செய்யலாம்.

நாவினால் பகவான் நாமாவை உச்சரித்துப் புண்ணிய நோட்டாக மாற்றிக் கொள்ளலாம்.

வம்பு, தும்பு பேசினால், கெட்ட காரியம் செய்தால் கடன் நோட்டாகத்தான் சேர்ந்து விடும்!

## பற்றின்மை

பொருள்கள் மீது மனிதனுக்குப் பிரியம் ஏற்படுகிறது.

மனிதனுக்கு எத்தனை பொருள்களின் மீது பற்று ஏற்படு

**காஞ்சிப் பெரியவர்**



கிறதோ அத்தனை அழுகைக்கு முளையடித்தாகி விட்டது என்று அர்த்தம்.

எந்தப் பொருளாயினும் என்றோ ஒரு நாள் ஒன்று, அது நம்மை விட வேண்டும்; அல்லது நாம் அதை விட வேண்டியிருக்கும்.

பிரிவின் போது துக்கம் ஏற்படத்தான் செய்யும்.

ஒரு பொருளின் மீது பிரியம் உண்டு என்றால் அதைத் தொடர்ந்து அப்பொருளின் பிரிவும் இருக்கவே செய்கிறது.

பிரிவின் போது துயரம் ஏற்படாமல் செய்து கொள்ள ஒரு வழியுண்டு.

அதாவது மனம் ஒப்பிப் பொருளின் ஆசையிலிருந்து பிரிந்து விட வேண்டும்.

இதற்குத்தான் வைராக்கியம் என்று பெயர்.

மாமரத்தில் மாங்காய் இருக்கிறது. காயாக இருக்கும் போது பறித்தால் காம்பில் தண்ணீர் சொட்டுகிறது.

ஆனால் அதே மாங்காய் நன்றாகப் பழுத்து விட்டால் பழம் தானாகவே உதிர்ந்து காம்பில் த(க)ண்ணீர் வருவதில்லை.

காயாக இருக்கும் போது அதில் கசப்பும் புளிப்பும் இருந்தன.

கசப்பு மாறித் தித்திப்பு வந்தவுடன் பழம் தானாக உதிர்ந்து விடுகிறது.

அது போல — பற்றின்மைக்கு மனப்பக்குவம் உண்டாகிச் சித்தம் தித்தித்து விட்டால் பிரிவில் வருத்தம் உண்டாகாது.

## எங்கும் நிறைந்தது எப்படித் தெரியும்?

ஓர் இடத்தில் மாத்திரம் இருக்கும் வஸ்து கண்ணுக்குத் தெரியும்.

எங்கும் நிறைந்த வஸ்து எப்படிக் கண்ணுக்குத் தெரியும்?

காற்றே கண்ணுக்குத் தெரியவில்லை.

காற்றுப் புகாத இடத்திலும் ஆகாயம் உண்டு.

அது கண்ணுக்குத் தெரியவில்லை.

எங்குமே உள்ள பரமாத்மாவின் ஸ்வரூபம் ஆகாயத்தை விட சூட்சுமமானது.

அதனால் அது கண்ணுக்குத் தெரிவதில்லை.

ஆயினும் கண்ணுக்குத் தெரியாத ஆவியே குளிர்ந்து சீதளமாகி விட்டால் பனிக்கட்டியாகிக் கண்ணுக்குத் தெரிகிறது.

அப்படியே பக்தர்களின் இருதயத்தில் அன்பின் குளிர்ச்சி அதிகமாகிவிட்டால் உருவமில்லாத பரமாத்ம ஸ்வரூபம் அம்பாளின் அருள் உருவமாகத் தெரியும். ○

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்து சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியனும் கௌசல்யா சுப்பிரமணியனும் இணைந்து

''இந்தியச் சிந்தனை மரபு'' என்ற மிகவும் அருமையான ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள். இது பற்றி தமிழகத்து பிரபல எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி எழுதிய விமர்சனம் ''இந்தியா ருடே'' யூலை 6 - 20, 1994 இதழில் வெளிவந்துள்ளது. அதனைக் கீழே தருகிறோம்.

# கயிற்று நடை சாகஸம்

— இந்திரா பார்த்தசாரதி

மேல்நாட்டு தத்துவ வரலாறுகளிருப்பது போல் இந்தியாவில் ஒரு தொடர்ச்சியான சிந்தனை மரபைக் காண்பதே ஓர் அரிய செயல் என்று ஒரு சில இலக்கிய விமரிசகர்களே கூறியிருக்கிறார்கள்.

இக் கூற்றினை மறுப்பதற்கென்றே இந் நூல் வெளிவந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

இந்தியச் சிந்தனை மரபைப் பற்றி வரலாற்று முறையில் தமிழில் எழுதப்பட்டிருக்கும் முதல் நூல் இதுதான் என்று நான் நினைக்கிறேன்.

மிகத் தெள்ளத் தெளிவாக தத்துவார்த்த விஷயங்களை விவாதிக்கும்போது தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விடுகின்ற சிக்கலான நடையைத் திர்மானத்துடன் தவிர்த்து எழுதப்பட்டுள்ள இந் நூலை தமிழக சிந்தனையாளர் அனைவரும் வரவேற்க வேண்டும்.

வேத காலத்திலிருந்து, மார்க்சியத்தையும் சைவத்தையும் இணைக்க முயலும் குன்றக்குடிகளார் வரை பரிணாமம் அடைந்திருக்கின்ற சிந்தனை மரபை, அந்தந்தத் தத்துவம் பற்றி, உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ ஆவேசமாக எந்த விதமான அபிப்பிராயமும் தெரிவிக்காமல், அத் தத்துவங்கள் பற்றிய கருத்துச் சாரத்தை முதன்மைப் படுத்தி எழுதியிருக்கிறார்கள் கலாநிதி நா. சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன் ஆகிய இருவரும்.

சர்கஸ்காரர்கள் கயிற்றில் நடக்கும் வித்தையைப் போல், அறிவு

சார்ந்த லாவகம் இவ் வாசிரியர்கள் எழுத்தில் புலப்படுகிறது.

வேத மரபு பற்றியும் அதற்குப் புறம்பான அவைதிகம் என்று குறிப்பிடப் படுகின்ற சிந்தனைகள் பற்றியும் இந்நூல் நுண்மையாக ஆய்வு செய்கிறது.

உலக சிந்தனை வரலாற்றில் ஸ்தாபனம் என்று ஒன்று இருந்தால், அதற்கு முரணிய எதிர்க் கருத்து இணைக்கோட்டியக்கமாக வளர்ச்சியுறும் என்பது கண்கூடான உண்மை.

கிரேக்க சிந்தனை தொடக்கமாக இன்று வரை நாம் அதைப் பார்த்து வருகிறோம்.

இது மனித உளவியல் பாங்கின் இன்றியமையாத அம்சம்.

உலகாயதத்தின் பிதாமகராகக் கருதப்படுகின்ற பிரகஸ்பதி காலத்திலிருந்து தேவி பிரசாத் சட்டோபாத்யாய காலம் வரைஇவ் இணைக்கோட்டியக்கத்தின் நீட்சியை இக்கருத்துக் கோட்பாட்டின் பின்னணியில் தான் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

சஞ்சய் பேலட்ட புத்திருடைய விட்சேப வாதத்தைப் பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது.

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருப்பதென்பது சாத்தியமன்று என்பது தான் இக் கொள்கையின் அடிப்படைக் கருத்து.

''எதையும் நான் மறுக்கவுமில்லை,ஒப்பவுமில்லை இருக்கலாம். இல்லாமலும் போகலாம்'' என்று கூறும் இக் கருத்துச்களுக்கு தற்காலத்திய விஞ்ஞான முடிவுகள் அரண் செய்வது போல் தோன்றுகிறது.

இந் நூலாசிரியர்கள் கீதையையும் குறளையும் விரிவாக ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார்கள்.

கீதை ''ஒரு வகையில் வேத மரபின் வாரிசாகவும் இன்னொரு வகையில் புராண மரபின் சாரமாகவும் வேறொரு வகையில் தர்ம சாஸ்திரங்களை நியாயப் படுத்தும் தத்துவமாகவும் தன்னை வெளிப் படுத்திக் கொண்டது'' என்று இந் நூல் கூறுகிறது.

இதை மறுப்பதற்கில்லை.

ஆனால் அதே சமயத்தில், 'ஆரிய' த்துக்குப் புறம்பான, ஒரு வேளை 'திராவிட' (குறிப்பிடுவதற்குச் சௌகரியமான சொற்கள்) கருத்துப் பாதிப்புக்கு உள்ளான நூல் கீதை என்று டாக்டர் ஜிம்மர் கூறியிருப்பதையும் இந்நூல் கவனத்தில் கொள்வது நல்லதென்று எனக்குப் படுகிறது.

ஏனென்றால்,

உபநிடதங்கள் 'தனி மனித மீட்சி' 'அகம் பிரும்மாஸ்மி' யைப் பற்றித்தான் அதிகம் வலியுறுத்தின.

பழங்குடி மக்கள் மரபு 'சமுதாய மீட்சி' பற்றி அக்கறை கொண்டிருக்க வேண்டுமென்பது வரலாற்றுச் செய்தி.

அதற்கேற்ப —

பக்தி இயக்கம் தென்னகத்தில் தான் தோன்றியது என்பதையும் ஊன்றி நோக்குதல் வேண்டும். O

'பஜ்' என்ற வேர்ச் சொல்லின் பொருள் 'கூடி' என்பதாகும்.

சமஸ்கிருதம் ஆரிய மொழியா, திராவிடமொழியா என்றாராய்வது கால விரயம். வெவ்வேறு இன பண்பாட்டுக் கலப்பில் உருவாகியது சமஸ்கிருதம்.

கீதையில் பக்தி மார்க்கம் உள்ளது.

பின்னால் விசிஷ்டாத் வைதத்துக்கு வழி கோலிய சரணாகதித் தத்துவம் குறிப்பிடப்படுகிறது.

செயல் முறையையும் நிகழப் போவதைத் தவிர்க்க இயலாது என்ற வரலாற்றுக் கட்டாய உண்மையையும் வலியுறுத்தும் கீதையின் சாரம்தான் புறநானூற்றில் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற பாடலாகப் பயின்று வருகின்றது.

சங்க கால வாழ்க்கையின் தொடர்ச்சியாக திருக்குறளை இந்நூல் காண்பது மிகவும் பொருத்தமானது.

'தொடர்ச்சி' என்னும்போது சங்க கால வாழ்க்கையின் மதிப்புக்களை மறுப்பதும் உள்ளடக்கம்.

செவியறிவு நூல் எனும் துறையில் சங்க காலத்தில் சில பாடல்கள் இயற்றப் பட்டிருந்தாலும் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பதுதான் சமூக வாழ்வின் அடிநாதக் கருத்தாக அக்காலத்தில் இருந்திருக்கிறது.

ஆனால் —

குறள், கொடுங்கோல் மன்னனை வழிப்பறிக் கொள்ளைக்காரன் என்று சித்தரிக்கத் தயங்கவில்லை.

புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, வரைவின் மகளிர் ஆகிய யாவும் சங்க கால வாழ்க்கை மதிப்புக்களின் மீது குறள் தொடுக்கும் கணைகள்.

இவ்வகையில் குறளை இணைக் கோட்டியக்கத்தின் ஒரு குரலாகத் தான் பார்க்க வேண்டும்.

'அந்நிய' களப்பிரர் என்று இந்நூல் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. குறள் களப்பிரர் தொடர்பினால் ஏற்பட்ட சீரழிவினின்றும் சமுதாயத்தைக் காப்பாற்ற வந்த நூலென்றால் இதற்கான சான்றுகள் குறளிலேயே இருக்க வேண்டும்.

அண்மையில் வெளிவந்துள்ள சிந்திக்கத் தூண்டும் சில நூல்களில் "இந்தியச் சிந்தனை மரபு" மிகவும் முக்கியமானது. O

---

## சூரியனைப் பார்க்க விளக்கு வேண்டாம்

சூரியனைப் பார்ப்பதற்கு நமக்கு விளக்குத் தேவையில்லை.
அதன் ஒளியிலேயே நாம் சூரியனைப் பார்க்கிறோம்.
அதேபோல,
நாம் கடவுளைக் காண பிற சாதனங்கள் தேவையில்லை.
கடவுளைக் காண நமக்குக் கடவுளின் அருளே போதும்.

★

# தம் தம்

# விதியின் பயனே!

பணக்கார வாலிபன் ஒருவன்!

அவனுக்குப் புதிதாகக் கலியாணம் ஆகியிருந்தது.

மனைவி வைரத் தோடு கேட்டாள்.

அவளை அழைத்துப் போய் மிகவும் விலை உயர்ந்த வைரத் தோடு வாங்கிக் கொடுத்தான் கணவன்!

கடையில் இத் தம்பதியர் தோடு வாங்குவதை இரண்டு திருடர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அதை எப்படியும் அன்றிரவு திருடிவிடத் தீர்மானித்தார்கள்.

அன்றிரவு தோட்டைப் போட முயன்ற அந்த இளம் மனைவி காதில் தோடு நுழையாததைக் கண்டு பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் பரிகாரம் கேட்டாள்.

"ஓலைச் சுருளில் களிமண் சிறிது லவத்துச் சுருட்டி இரண்டு நாள் காதில் போட்டுக் கொள்! துளை பெரிதாகிவிடும்! பிறகு தோட்டைப் போட்டுக் கொள்ளலாம்" என்று யோசனை சொன்னாள் பாட்டி.

இளம் மனைவி வைரத் தோட்டைப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு பாட்டி சொல்லியது மாதிரி களிமண் வைத்த ஓலைச் சுருளைப் போட்டுக் கொண்டாள்.

அன்றிரவு அவள் வாசலுக்கு வந்தபோது இரண்டு பக்கத்திலும் பதுங்கியிருந்த இரு திருடர்களும் ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து ஆளுக்கொரு காதை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள்.

இப்போது யாருக்கு என்ன பயன் கிடைத்தது? இதில் சம்பந்தப்பட்டவர்களின் 'அதிர்ஷ்டங்கள்' எப்படி இருக்கின்றன?

இளம் மனைவிக்கு பெட்டியில் வைரத் தோடு இருந்தும் போட்டுக் கொள்ளக் காதில்லை!

திருடர்களுக்கோ அறுந்த காதும் களிமண்ணும் பனை ஓலையும்தான் கிடைத்தன!

அவரவர் விதிப்படி லாப நஷ்டங்கள் கிடைக்கின்றன!

"தோழி! நிதியும் கணவனும் நேர்படினும் தம் தம் விதியின் பயனே பயன்" என்பது ஔவை மூதாட்டியின் வாக்கு! O

[redacted]

# நாவலர் பெருமான்

''நாவலர் எழுதிய ''நீதி வாக்கியங்கள்'' இரண்டாம் பால பாடத்தில் இடம்பெற்றவை என்பது ''சமய மஞ்சரி'' யைப் படித்தபோதுதான் எனக்குத் தெரிந்தது! நமது இளைஞர்கள் நல்ல கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும், நல்ல முறையில் தமிழ் எழுதப் பழகவும், நாவலர் பெருமானின் எழுத்துக்களைத் தொடர்ந்து வெளியிடுங்கள்'' என்று கடிதம் எழுதியிருக்கிறார் கரவெட்டியிலிருந்து சி. ஜெகதீஸ்வரன்!

## நீதி வாக்கியங்கள்

நாம் சிறு துன்பங்களை சகிக்கப் பயிலல் வேண்டும்; பயில்வோமாகில் மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

மனத்திருத்தியிலும், சரீராரோக்கியத்திலும் நற்குண நற்செயகைகளை உடையவராய் வாழ்தலிலுமே அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவருமே இலர்; அது உள்ள பொழுது வறியவராவார் மிக அரியர்.

கடன் படும் செல்வர்களினும் கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

கோட் கேட்பவன் இல்லையாயின், கோட் சொல்பவனும் இல்லை.

பிறருக்கு வரும் கல்வி, செல்வங்களைக் காணும் பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன்மனசுக்கு அழகு.

நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாதாபப் படுவேமாயின் அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

நம்முடைய குற்றங்கள் அவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சினேகிதர்கள்.

பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது அடங்கிவிடும். O

# 'கல்கி' சொல்கிறார்:

# நம்முடைய அறிவின் குறைபாடே காரணம்!

பத்திரிகைய
எழுத்துலகின் (
ஆணித்தரமான
பயணக் கட்டுை
றல் வாய்ந்தவர்
ளிடையே தேச
1936 ம் ஆண்டு

★ ★ ★ ★

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எந்த ஒரு தனி மனிதரால் பாரதநாடு மிகவும் பயன் அடைந்தது என்று யோசித்தோமானால், 'ஸ்ரீ ராமகிருஷ்ணர்'' என்ற முடிவுக்குத்தான் வந்து சேர்வோம். இருபதாம் நூற்றாண்டில் மகாத்மா காந்தி இல்லாவிட்டால் இந்தியாவின் சரித்திரம் வேறு விதமாக இருந்திருக்குமென்று சொல்கிறோமல்லவா. அது போலவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றியிராவிடில் இந்தியாவின் சரித்திரம் வேறு விதமாக இருந்திருக்கு என்று சொல்லலாம்.

உலகத்தில் தேச சரித்திரங்களின் போக்கை மாற்றி அமைத்தவர்கள் என்னும் பெருமை வெகு சிலருக்குத்தான் கிடைக்கிறது. அவர்களிலும் பெரும்பாலோர் தீமைக்கே சரித்திரப் போக்கை மாற்றுகிறவர்கள். நெப்போலியன், லார்ட் கிளைவ் முதலியோர் இந்த வகையினர். ஒரு நகரத்தின் தோற்றத்தை நகர நிர்மாணத் திட்டத்தினால் மாற்றி அமைக்கலாம்; பூகம்பமும் அதை மாற்றி அமைக்கக் கூடுமல்லவா?

தேச சரித்திரத்தின் போக்கை நன்மைக்கே மாற்றி அமைத்த புருஷர்களில் ஒருவர் ஸ்ரீராமகிருஷ்ண தேவர், அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடமே போனதில்லை. பொருள் சேர்த்தவருமல்ல. கேவலம் ஒரு சட்டசபை எலெக்ஷனுக்குக் கூட அவர் நின்றதில்லை. ஆயினும் அவர் இந்தியாவின் சரித்திரப் போக்கையே மாற்றியவராவது எப்படி?

இதை அறிவதற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு நேர இருந்த பெரிய விபத்து இன்னதென்பதை நாம் உணர வேண்டும். அந்த நூற்றாண்டில் பிரிட்டிஷ்சாம்ராஜ்யம் இந்தியாவில் வேரூன்றி நிலைபெற்றது. அரசியல் சுதந்திரத்தை இழத்தல் பெரிய விபத்துத்தான்; ஆனால் இந்தியாவுக்கு அது புதிதன்று, அதற்கு முன் பல நூற்றாண்டுக் காலம் பாரசீகர் ஆப்கானியர் முதலியோர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கின்றனர்.

ஆனால் அப்பொழுதெல்லாம் நேராத ஒரு பெரிய கேடு சென்ற நூற்றாண்டில் நேரிட இருந்தது. அதுதான் மேனாட்டு நாகரிகத்தில் நமது வகுப்பார் கொண்ட மோகம்.

சென்ற நூற்றாண்டில் நம்

ராகவும் எழுத்தாளராகவும் மகத்தான சாதனை செய்தவர் ''கல்கி''! தமிழ்
சூடா மன்னராக விளங்கியவர்! அற்புதமான வரலாற்று நாவல்களையும்
ரசியல் கட்டுரைகளையும் காரசாரமான விமர்சனங்களையும் தனித்துவமான
ளையும் எழுதியவர்! நகைச்சுவை பொங்கிப் பிரவாகிக்க எழுதுவதில் தனி ஆற்
ன்ன எழுதினாலும் அதனைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதியவர்! மக்க
யும், தமிழ்ப் பக்தியும், தெய்வ பக்தியும் வளரப் பெரும்பணி செய்தவர்!
ளியான ''ஆனந்த விகடன்'' இதழில் இவர் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

நாட்டில் ஆங்கிலக் கல்வி பரவத் தொடங்கியது. அது வரையில் நமது தேசிய தர்மத்துக்கும், நமது நாட்டுக் கல்விச் செல்வத்துக்கும் எந்த வகுப்பார் பாதுகாவலர்களாக இருந்தார்களோ, அவர்களே மிகுதியாக ஆங்கிலக் கல்வி பயிலத் தொடங்கினார்கள். அதன் பயனாக மேனாட்டுப் பௌதிக ஞானமும், யந்திர நாகரிகமும் பாரத நாட்டின் பாரமார்த்திக ஞானத்தை விட மேலானது என்ற எண்ணம் பரவலாயிற்று. நமது தர்மம், நமது நாகரிகம், நமது கல்வி எல்லாவற்றின் மீதும் அலட்சியமே ஏற்பட்டது.

இந்த மேனாட்டு நாகரிக மோகம் மற்றச் சமூகங்களை விட ஹிந்து சமூகத்தையே அதிகம் பாதித்தது. ஏனென்றால் ஹிந்து மதத்தின் கோட்பாடுகள் மிகவும் விசாலமானவை. குறுகிய நோக்குடைய கட்டுப்பாடுகளை அதில் காணமுடியாது. அறிவராய்ச்சிக்கு அதில் பூரண இடமுண்டு. பரம பக்தன் முதல் பரம நாஸ்திகன் வரையில் எல்லோருக்கும் ஹிந்து சமூகம் இடம் கொடுக்கிறது. நிர்க்குணப் பிரம்மத்தை வழிபடும் வேதாந்தி முதல் வீரன், இருளன், சங்கிலிக் கறுப்பன் முதலிய சிறு தெய்வங்களை வழிபடும் ஜனங்கள் வரையில் எல்லாரையும் ஹிந்து சமூகம் அணைத்துக் காக்கிறது.

தமிழ் நாட்டில் சில காலமாக கடவுளுக்கு விரோதமாக கிளர்ச்சி ஒன்று நடந்து வருவது நேயர்களுக்குத்தெரியும். இந்தக் கிளர்ச்சியைச் சேர்ந்த இளைஞர்களில் சிலர்வாக்கு வன்மையில் சிறந்தவர்கள். இவர்களில் ஒருவரை நான் ஒரு சமயம் சந்தித்த போது இன்னொரு நண்பருக்கு அவரைத் தெரியப் படுத்த வேண்டியதாயிற்று. அப்போது, ''இவருடைய பிரசங்கம் ஒன்றைப் மட்டும்கடவுள் வந்துகேட்பரானால் சீக்கிரத்தில் தாம் இருக்கிறோமா இல்லையா என்பதில் அவருக்கே சந்தேகம் வந்து விடும். முடிவில் 'நான் இல்லை' என்று அவரே தீர்மானித்து விடுவார்'' என்று சொன்னேன்.

வேறு மதங்களைச் சேர்ந்தவர் தங்கள் தெய்வங்களைப் பற்றியோ மதாநுஷ்டானங்களைப் பற்றியோ இவர்கள் பேசுகிற தோரணையில் பேசினால் அவர்கள் கதி யாதாகுமோ தெரியாது. நிச்சயமாய் அந்த மதங்களில் அவர்கள் இருக்க முடியாது.

ஆனால் மேற்கண்டவாறு பேசுகிறவர்களுக்குக் கூட நமது ஹிந்து மதம் இடம் கொடுத்து வருகிறது. அவர்கள் இன்னமும் ஹிந்துக்கள் தான்!

★ சென்ற நூற்றாண்டில் மேனாட்டு நாகரிகமென்னும் வெள்ளம் பாரத நாட்டின் மீது கரைபுரண்டு வந்தபோது ஹிந்து சமயம் அதில் அடிபட்டு அடியோடு மூழ்கிப் போய்விடுமோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது. அந்த பயத்தைப் போக்க அவதரித்தவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இது ஹிந்து மதத்திற்கு ஒருதனிப் பெருமை என்பது உண்மையே— ஆனால் அந்தப் பெருமையிலேயே பலவீனமும் இருக்கிறது. சட்டுப்பாடு இல்லாமையால் சிதறிப் போவதும் சுலபம்.

ஆகவே சென்ற நூற்றாண்டில் மேனாட்டு நாகரிகம் என்னும் வெள்ளம் பாரத நாட்டின் மீது கரை புரண்டு வந்த போது, ஹிந்து சமயம் அதில் அடியோடு முழுகிப் போய் விடுமோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பயத்தைப் போக்கி, எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக அழியாத ஹிந்து சமயம் என்றும் அழியாது என்பதை நிலைநிறுத்த அவதரித்தவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மேனாட்டு நாகரிகத்தை எதிர்த்து வெற்றி கொள்ள இறைவன் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பாத்திரமாகக் கண்டதே ஒரு விசித்திரமாகும். மேனாட்டு நாகரிகம் மிருக பலத்தை அடிப்படையாகக்கொண்டது; ஸ்ரீராமகிருஷ்ணரோ துர்ப்பலமான தேகத்தை உடையவர். மேனாட்டு நாகரிகத்தின் தெய்வம் பணம்தான்; ஸ்ரீராமகிருஷ்ணரோ பணத்தைக் கையினாலும் தொடுவதில்லை என்ற விரதம் கொண்டவர். மேனாட்டு நாகரிகம் இந்த உலகத்தை எல்லாம் கட்டியாளும் பேராசை கொண்டது ஸ்ரீராமகிருஷ்ணரோ ஒரு குழி நிலமும் தமக்கென இல்லாதவர். மேனாட்டு நாகரிகம் கல்விச் செருக்குக் கொண்டது; பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியில் தனக்கு நிகரில்லை என்னும் இறுமாப்பு உடையது; ஸ்ரீராமகிருஷ்ணரோ எழுத்து வாசனை அறியாதவர்; பள்ளிக்கூடத்தின் வாசற் படியும் நுழையாதவர்

இத்தகைய மாறுபட்ட நிலைமையில் அவதரித்து மேனாட்டு நாகரிகத்தை வெற்றி கொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுள்ளம் இருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அவதார லட்சியம் சுவாமி விவேகானந்தரின் மூலமாகப் பரிபூரணமாயிற்று என்று சொல்லலாம். சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்றுஅதன் தாடியைப் பிடித்துக் குலுக்கினார் ஸ்வாமிஜி மேனாட்டு நாகரிகத்தில் தலைசிறந்த அமெரிக்காவுக்குச் சென்று, அங்கே ஸநாதன தர்மத்தின் பெருமையை எடுத்துக் கூறினார். பணப் பேய் அரசு புரிந்த அந்த நாட்டிற்கு இவர் கையில் தம்படி இல்லாமல் சென்று தியாக வாழ்வின் மகிமையை விளக்கினார். உலகாயதம் தலை விரித்தாடிய அந்த நாட்டில் சுவாமிகள் ''உலகம் அநித்தியம்; கடவுளே சத்தியம்' என்று கர்ஜனை புரிந்தார்.

இதனாலெல்லாம் மேனாட்டார் ஏதாவது பயன் பெற்றார்களோ, என்னவோ யாம் அறியோம்; ஆனால் இந்தியர்கள் பயன் பெற்றது உண்மை. தங்கள் தர்மத்தின் பெருமையை அவர்கள் நன்கு உணர்ந்தார்கள். அப்போது மேனாட்டு நாகரிக வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்தாகி விட்டது, ஹிந்து சமயத்துக்கும் ஹிந்து சமூகத்துக்கும் இனி ஆபத்தில்லை என்று நிச்சயமாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தர் போட்ட அடிப்படையின் மேலேதான் இந்த நூற்றாண்டில் மகாத்மா காந்தி சத்தியாக்கிரக இயக்கமாகிய கட்டிடத்தை எழுப்புதல் சாத்தியமாயிற்று என்று சொல்லலாம்.

பரமஹம்ஸர் நமது தேசிய வாழ்வின் போக்கை மாற்றியது போலவே, தனி மனிதர்கள் எத்தனையோ பேரின் வாழ்க்கையையும் மாற்றி அமைத்திருக்கிறார். அவர் பூத உடம்பை நீத்த பின்னரும் அவருடைய சக்தி இந்த நாட்டில் இயங்கி அநேகருடைய வாழ்வை மாற்றியமைத்து வருகிறது.

ஆராய்ச்சி அறிவுடைய ஒவ்வொருவருக்கும் சில சமயம் கடவுள் உண்மையைப் பற்றிச் சந்தேகம் உண்டாவது இயல்பேயாகும். "கடவுள் ஒருவர் இருந்தால் உலகில் ஏன் துன்பங்கள் இருக்கின்றன"? என்ற கேள்விக்குத் தெளிவான விடை இதுவரை யாரும் சொன்னதில்லை. அது மனித அறிவினால் அறியமுடியாத ரகசியமாகும். இவ்வாறு நமது அறிவின் குறைபாட்டை ஒப்புக் கொள்வது கஷ்டமே அல்லவா?

இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் மனம் செல்லும் போதெல்லாம் நான் ஸ்ரீராமகிருஷ்ணரை நினைத்துக் கொள்வேன். "இதோ கடவுளை நேருக்கு நேர் கண்டவர் ஒருவர் சமீப காலத்தில் இருந்திருக்கிறார்' அவர் தாம் கடவுளைக் கண்டதல்லாமல் இன்னும் பலரையும் காணச் செய்திருக்கிறார். கல்வியறிவில் நம்மைவிட எவ்வளவோ தேர்ந்த மேதாவிகள் பலர் அவரை நேரில் கண்டு வழிபட்டு அவரிடம் கடவுள் சாந்நித்யம் இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே கடவுள் ஒருவர் இருக்கத்தான் வேண்டும். அவருடைய செயல்களைச் சில சமயம் நாம் அறியமுடியவில்லை என்றால் அதற்கு நம்முடைய அறிவின் குறைபாடே காரணம்" என்று எண்ணித் திருப்தியடைவேன். O

## பாராயணத்தின் அவசியம்

நல்ல நூல்களைப் பாராயணம் செய்ய வேண்டும். கந்தரனுபூதி, திருமுருகாற்றுப் படை போன்ற நூல்களைப் பாராயணம் செய்ய வேண்டும். தினந்தோறும் பக்தியோடு பாராயணம் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் மனத்திலே திட்பம் உண்டாகும். நினைவாற்றல் அதிகரிக்கும், எல்லா நன்மையும் கிடைக்கும். அதில் ஈடுபாட்டுடன் செய்வது அவசியம்.

— வாரியார் சுவாமிகள்

# வேடுவனும் கரடியும் புலியும்!

ஒரு புலி வேடனைத் துரத்திக் கொண்டு போயிற்று, வேடன் அருகில் இருந்த மரத்தில் ஏறிக்கொண்டான். அதற்கு முன்பே அங்கு ஒரு கரடி இருந்தது.

புலி கரடியிடம் கூறிற்று: ''இவ் வேடன் நமது மிருக குலத்துக்கே பகைவன். இவனைக் கீழே தள்ளி விடு!''

கரடி கூறிற்று: ''இருக்கலாம்! ஆனால் இவன் நான் இருந்த மரத்தை அண்டியதால் என்னிடம் சரண் புகுந்தவன் ஆகிறான். சரண் அடைந்தவனைக் கைவிட மாட்டேன்''

இவ்வாறு சொல்லிவிட்டுச் சிறிது நேரத்தில் கரடி உறங்கியது.

சற்று நேரம் கழித்துப் புலி வேடனிடம் கூறிற்று: ''எனக்குப் பசியாக இருக்கிறது. நீ அந்தக் கரடியைக் கீழே தள்ளிவிட்டால் நான் உண்டு பசியாறி உன்னை விட்டு விடுகிறேன்''

இதைக் கேட்ட வேடன் கரடியைக் கீழே தள்ளிவிட்டான்! கரடியோ தனக்கு இயற்கையாக உள்ள லாவகத்தால் மரத்தின் கீழ்க்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு விழாமல் தப்பி மேலே ஏறிக் கொண்டது.

அப்போது புலி கரடியிடம் சொன்னது; ''நான் முன்னமே சொன்னேனே! இந்த மனிதன் நன்றி கெட்டவன்! சரண் அடைந்தவனைக் காப்பாற்றுவேன் என்ற உன்னையே தள்ளிவிட்டான் பார்த்தாயா: இனியும் அவனை வைத்திருக்க வேண்டியது இல்லை! தள்ளி விடு!''

கரடி சொன்னது; ''இருக்கலாம்! எவனோ ஒருவன் தன் ஒழுக்கத்தினின்று வழுவினான், அறத்தைக் கொன்றுவிட்டான் என்றால், அதற்காக நான் எனது தருமத்தைக் கைவிடக்கூடாது! இன்னமும் அவன் சரண் புகுந்தவனே! அவன் தீயோனாக இருக்கலாம்! இருந்தாலும் அவனைத் தள்ளுவது அறத்தினின்று நான் தவறியது ஆகும்! என் அறத்தைக் காப்பது எனது கடமை!''

கரடி வேடனைத் தள்ள மறுத்துவிட்டது. சீரியோர் பிறருடைய தீய செயல்களைப் பின்பற்ற மாட்டார்கள்! பிறருடைய நற்செயல்களைப் பின்பற்றி தமது ஒழுக்கத்தைப் போற்றிக் காப்பர்! ஒழுக்கமே சான்றோருக்கு அணி! ''ஒழுக்கமே செய்தார்க்கால் இனியவே பயத்த தேசால்'' இது சான்றோர் இலக்கணம்!

தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சான்றாண்மை உடையவர் இனியவற்றையே செய்வர்! ○

# கடவுள் கதவை தட்டிய போது—

ஓர் ஊரில் எல்லோரும் கடவுளிடம் பக்தி செலுத்தினார்கள்.

ஊர்க் கோயிலில் நிறையவே திருவிழாக்கள், யாகங்கள் பொங்கல்கள் எல்லாம் நடந்தன. மேளக் கச்சேரிகளும், கதாப் பிரசங்கங்களும் குறைவில்லாமலே இடம் பெற்றன. மக்களும் ஒழுங்காகக் கோயிலுக்கு போய் நிறையவே அர்ச்சனை, அபிடேகம், பூசை எல்லாம் செய்தார்கள்.

கடவுளிடம் ஏதேதோ வேண்டுதல்களை எல்லாம் செய்தார்கள். தங்கள் குறை தீர்க்க வேண்டுமென்று நிறையவே பிரார்த்தனை செய்தார்கள்.

இவர்களுடைய பிரார்த்தனைக்கு இரங்கி கடவுளும் அந்த ஊருக்கு வந்தார்.

அன்று இரவு தன்னுடைய பக்தர்கள் ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறியத் தீர்மானம் செய்தார்.

இரவு முற்றியதும் ஒரு பணக்காரன் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினார்.

''யார் அது'' என்று உள்ளிருந்து கேள்வி வந்தது.

''நான்தான் கடவுள்'' என்றார் கடவுள்.

''சே! சே! போ! போ! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?'' என்று பணக்காரன் சீறினான்.

கடவுள் அடுத்த வீட்டுக்குப் போனார்.

அங்கும் கதவைத் தட்டினார். அது ஒரு பெரிய வியாபாரியின் வீடு.

''யாரோ பிச்சைக்காரன்! இந்த நேரத்தில் என்ன பிச்சை? போ! போ!'' என்று அந்த வீட்டுக்காரனும் அவரை விரட்டி அடித்தான்.

பல வீடுகளுக்குப் போய்க் கதவைத் தட்டியும் பலன் இல்லாது போய்விட்டது.

கடவுளுக்கே களைப்பு வந்து விட்டது.

கடைசியாக —

தெரு ஓரத்தில் செருப்புத் தைத்துப் பிழைப்பு நடாத்தும் ஒரு ஏழையின் குடிசைக்குப் போனார்.

அந்தக் குடிசைக்குக் கதவே இல்லை.

கடவுள் குடிசைக்குக் கிட்டப் போனதுமே உள்ளே இருந்தவன் 'யார் அது?' என்று கேட்டான்.

'நான்தான் கடவுள்' என்றார்.

அவன் ஓடி வந்து அவரது கையைப் பிடித்து அணைத்து 'வா, வா! உள்ளே வா!'' என்றான்.

கடவுளுக்கு வியப்பாகப் போய் விட்டது.

''நான்தான் கடவுள் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''இந்தக் குடிசைக்கு கடவுளைத் தவிர வேறு யார் வருவார்கள்? நீ வந்திருப்பதால் நீ கடவுளாகத்தான் இருக்க வேண்டும்!'' என்றான் அவன்.

(ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் எழுதிய கதையின் தழுவல்.)

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஞான மொழி

"பலாச்சுளையைத் தேனில் தோய்த்துச் சுவைப்பது போல இருக்கிறது, பகவான் ராமகிருஷ்ணரின் ஞான மொழிகளை ராஜாஜியின் எழுத்துக்களில் படிக்கும்போது" என்று தெரிவித்திருக்கிறார் யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. ச, சிவசுப்பிரமணியம்-

## சமய பேதங்கள்

பல்வேறு வழிகளில் நாம் கடவுளை உபாசித்துக் காட்சியும் அருளும் பெறலாம். ஆற்றங்கரையில் பல படித்துறைகள் உண்டல்லவா? ஆனந்த வெள்ளமாகிய பரம்பொருளுக்கும் பல படித்துறைகள் உண்டு எந்தப் படித்துறையிலும் இறங்கித் தண்ணீர் மொண்டு கொள்ளலாம். குளிக்கலாம். எந்தச் சமயத்தையும் எந்த முறையையும் தூய உள்ளத்துடனும் பக்தியுடனும் பின்பற்றினால் போதும் ஆண்டவனை அடையலாம், ஒரு வீட்டின் மேல் மாடிக்குப் படிக்சட்டு வழியாக ஏறலாம்; மூங்கில் வைத்துத் தொத்தியும் ஏறலாம்; கயிற்றைப் போட்டு அதைப் பிடித்தும் ஏறலாம். இவ்வாறே பல சமயங்களும் பல வழிகளை காட்டுகின்றன.

அவரவர் தத்தம் மதத்தின்படி கடவுளை உபாசித்தல் நலம். கிறிஸ்துவ மக்கள் கிருஸ்து மார்க்கத்தையும், இந்துக்கள் ரிஷிகள் உபதேசித்த முறையையும், முஸ்லிம் மக்கள் முகமது நபி காட்டிய மார்க்கத்தையும் அனுசரிப்பதே மேலானது. பக்தியோடு வழிபடும் மக்கள் எந்த மதத்தினராயினும் சரி பிற மதத்தினரை மிக்க வினயத்துடன் கௌரவிப்பார்கள். எல்லாச் சமயங்களுமே நம்மைப் பரம்பொருளிடத்தில் சேர்ப்பிக்கும்.

இவ்வாறு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நூறு வருஷங்களுக்கு முன் உபதேசித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அசோக மன்னர் எழுதி வைத்த கல் சாஸனத்திலும் இதையே காண்கிறோம்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் பகவத் கீதையில் கண்ணன் சொன்ன உபதேசமும், அதற்குப் பின் அசோக மன்னரின் பன்னிரண்டாம் கல் சாஸனமும், பிறகு ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசமும், நம்முடைய வாழ்நாளில் அவதரித்து நமக்குப் பல துறைகளிலும் வழிகாட்டிய காந்தியடிகள் இட்ட ஆணையும் எல்லாம் ஒரே விதமாகவும் தெளிவாகவும் இருப்பதை உணர்ந்து அந்த ஆணைப்படி உறுதியாக நின்று நடந்து கொள்வோமாக.

ராஜாஜி

## பாம்பை நெருங்காதே

பாழிகளும் பாம்புகளுமிருக்கும் ஒரு பழைய வீட்டில் குடியிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ, அப்படியே வாழ்க்கையில் காமமும் லோபமுமாகிய விஷப் பொருள்களைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

பாழியில் ஒடுங்கியிருந்து திடீர் என்று கடித்துக் கொல்லும் நாகப் பாம்பைப் போலவே பண ஆசையும் காமத்தின் வேகமும் எதிர்பாராத முறையில் மனிதனைப் பிடித்து வீழ்த்திவிடும்.

ஞானிகளாயினும் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இடைவிடாமல் ஆண்டவன் நினைவை மனத்தில் நிறுத்தி வைக்க வேண்டும்.

சர்ப்பத்தைக் கண்டால் பழைய நாட்களில் கிராம வழக்கம் ''அம்மா தேவி! வாலைக் காட்டில் செல். படத்தைத் தூக்காமல் போய் விடு'' என்று ஒரு மந்திரத்தைச் சொல்லுவார்கள்.

பாம்பும் போய்விடும்.


காம விருப்பத்தை நாகப் பாம்பாகவே கருத வேண்டும்.

அதனுடன் விளையாடலாகாது. அதனின்று தூர நிற்பதே விவேகம்.

''நான் விவேகன். ஏன் பயப்பட வேண்டும்? இதில் என்ன கேடு வரும்? இவ்வளவோடு நிற்பேன். இதற்கு மேலே போக மாட்டேன்'' என்றெல்லாம் எண்ணுவது அவிவேகம்.

பாம்பை நெருங்கினால் நிச்சயமாகக் கடித்து விடும்.

தூய மனத்துக்குச் சக்தி உண்டுதான். அது அபாயங்களைத் தாண்டித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்.



வலையில் சிக்காது.

ஆயினும் யாராயினும் நீண்ட காலம் விஷப் பரீட்சை செய்தல் தவறாகும்.

நல்ல விவேகியின் உள்ளமும் சில சமயம் தடுமாறிப் போகும்.

காமப் பொருள்களிலிருந்து ஜாக்கிரதையாக தூர நிற்பதே விவேகம். அவ்வாறன்றி பரீட்சை செய்து பார்க்கலாம் என்று நெருங்கி ஒருவன் படிப்படியாக விட்டுக் கொடுத்துக் கொண்டு போய் அபாயத்தின் அருகிலேயே நின்றானானால் நிச்சயமாகக் கெட்டுப் போவான்.

## சித்த சுத்தி

அழகிய ஒரு ஸ்திரியைப் பார்க்கும் போது உலக மாதாவான தேவியைத் தியானிக்க வேண்டும். முன் நிற்கும் ஸ்திரி உலக மாதாவின் பல உருவங்களில் ஒன்று என்று நினைவூட்டிக் கொண்டு ''இது தேவியின் அவதாரம். உலக

மாதா அழகாக இல்லாமல் வேறு எப்படி இருப்பாள்? அன்புக்குரிய என் தாய் மகாதேவி எனக்குத் தரிசனம் தருகிறாள்'' என்று முன் நிற்கும் தாயை வணங்க வேண்டும்.

உள்ளத்தைக் குழந்தை பாவத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும். தாயைக் கண்டால் வேறு எண்ணங்களுக்கு இடம் ஏது?

இந்த உபாயத்தைதான் ஸ்ரீராமகிருஷ்ணர் முதலிலிருந்தே கையாண்டார்.

விவேகமும் கல்வியும் பெற்றவர்களும் கூட காம வேகத்துக்கு இரையாகி விடுவது உண்டு. இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்திருக்கும் இந்த உபாயம் மிகச் சிறந்த சாதனமாகும்.

பெண்ணுருவத்தைத் துவேஷிக்கலாகாது.

பெண்களைத் தாழ்த்தியும் பேசலாகாது.

வஞ்சக உருவம் என்று ஸ்திரிகளை இகழ்வது தவறு.

தாயை வெறுக்கலாமா, இகழலாமா? மகா புனிதமான தேவியின் அவதாரம்! இவள் உனக்குத் தாய்! அனைவருக்கும் தாய்! மகாசக்தி! உலகத்துக்கு மாதா! எங்கும் பரவி நிற்கும் பரம்பொருளே இந்த உருவம் எடுத்து நிற்கிறது!!

அதன் சௌந்தர்யமும் புன்சிரிப்பும் தாய்க்குள்ள இயற்கையான பிரியத்தின் அடையாளம்.

தேவியை வணங்கு,

காமம் மறைந்து போகும்.

பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்த இந்த உபாயத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாருங்கள். மனம் தூய்மைப்படுவதை உடனே உணர்வீர்கள்.

அழகிய பெண்ணுருவத்தை கண்டு மனம் தடுமாறினால் உடனே அசோக மரத்தடியில் தவமிருந்த சீதா தேவியைத் தியானித்துக் கொள். ராட்சஸர்களோடு சேருவாயா? அல்லது அநுமான் காலில் வீழ்ந்து உன் உள்ளத்தில் உள்ள மாசை ஒப்புக்கொண்டு தாயின் அருளைத் தேடுவாயா?

தேவி இந்த உருவத்தில் நின்று உன் பக்தியை அல்லவோ கேட்கிறாள். மூர்க்கனைப் போன்று உன் காமத்தைக் கிளப்பிக்கொள்ளாதே

பொய்யை மெய்யாகக் கருதி மாளும் வழியைத் தேடிக் கொள்ளாதே!

நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று நம் உள்ளத்தில் இருக்கிறது.

அங்கே குடிகொள்ளும் எண்ணங்களே புறச் செயல்களாக உருவம் எடுக்கின்றன. புறச் செயல் தான் பெரிது.

உள்ளத்திலிருப்பதை யாரும் அறியவில்லையென்று உள்ளத்தைப் வரவர அழுக்கு மூட்டையாய்ப் போக விடாதே. அப்படிச் செய்தால் வாழ்க்கைச் செயல்கள் அனைத்தும் தப்ப முடியாத வழியில் கெட்டுப் போகும்.

குடிநீர் எடுக்கும் கிணற்றில் அழுக்குச் சேரும்படி விட்டால் ஊரின் ஆரோக்கிய நிலை கெட்டுப் போவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் இதுவும், ○

# குமாரனும் மாரனும்

— கி. வா. ஜ.

முருகனுக்குக் குமாரன் என்ற பெயர் உண்டு. 'மாரன்' என்பது மன்மதனுக்குப் பெயர்.

காம உணர்ச்சியை எழுப்புகிறவன் மாரன். குமாரன் என்பதற்கு மாரனைக் குற்சிதம் செய்யும் பேரழகுடையவன் என்பது பொருள்.

முருகப் பெருமானது அவதாரக் கதை நமக்குத் தெரியும். தியானத்தில் அமர்ந்திருந்த சிவ பெருமானை மன்மதன் மலரம்பை விட்டுத் தியானம் கலையச் செய்தான். நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனையே சுட்டெரித்தான் சிவபிரான். அப்புறந்தான் பார்வதி கல்யாணம் நிகழ்ந்தது. பின்பே முருகப் பெருமானின் அவதாரம். ஆகவே முருகன் பிறப்பதற்கு முன் மன்மதன் அழிந்தான்.

குமார ஜனனத்துக்கு முன் மார தகனம் நடந்தது!

குமாரன் எங்கே இருக்கிறானோ அங்கே மாரனுக்கு வேலை இல்லை. குமாரனுடைய அருள் இருந்தால் மாரனை வென்று விடலாம்!

('காலையும் மாலையும்' என்ற நூலிலிருந்து)

## தூய்மையான உணவு

''உணவு தூயதானால் மனம் தூயதாகும். மனம் தூயதானால் கடவுளின் நினைவு நிலை பெறும்'' என்கிறது சாந்தோக்கிய உபநிடதம்.

சுத்த உணவு என்பது என்ன?

கீதா சொல்லுகிறது:

ஆயுளையும், சத்துவ குணத்தையும், பலத்தையும், உடல் நலத்தையும் வளர்க்கக் கூடிய சுவையான, பசையுள்ள, உடலால் நன்கு சீரணிக்கப்பட்டு வெகு நேரம் இருக்கக்கூடிய, மனத்துக்கு இதமளிக்கும் ஆகாரம் சத்துவ உணவு!

காரமானது, சுள்ளென்பது, உப்புக் கரிப்பது, மித மிஞ்சிய சூடு உள்ளது, எரிச்சலானது, உலர்ந்தது, பரபரப்பு ஊட்டுவது, நோயைத் தருவது ஆகியவையும், ஆறிப்போனது. சுவையற்றது, நாற்றம் எடுத்தது, பழையது, எச்சில்படுத்தப்பட்டது ஆகியவையும் தூய்மையில்லாத உணவுகள்!

தனது கடமைக்காக ஒருவன் சில சமயம் அவனுக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. அப்படி அவன் செய்ய முற்படும்போது, அதன் பாவமோ, புண்ணியமோ அவனைப் பாதிப்பதாகக் கூறுவது எப்படிச் சரியாகும்? இன்றைய வாழ்க்கை முறையில் ஒருவன் எப்போதும் நல்லவற்றையே செய்வது என்பது — அவன் விரும்பினாலும் கூட சாத்தியமாகுமா?

# ரகசியம் கர்ம யோகத்தில் இருக்கிறது

நம்முடைய செயல் நம்மை எப்படிப் பாதிக்கிறது என்பது பற்றிய சித்தாந்தம் மிக எளிமையானது.

இன்றைய வாழ்க்கையில் நாம் காலையிலிருந்து மாலை வரையில், ஏகப்பட்ட வேலைகளைச் செய்கிறோம். நம்முடைய தேவைகள் பல தரப்பட்டவை — அவற்றுக்காக நாம் மேற்கொள்ளும் கடமைகளும் வெவ்வேறு விதமானவை. அந்த அமர்க்களத்தில் நம்மால் நம்முடைய செயல் முறைகளின் விதிகளை ஆராய்ந்து பார்க்க இயலாது. அதற்குத் தேவையான தெளிவோ, அவகாசமோ நமக்கு இருக்கமுடியாது.

''நான்'' என்ற உணர்வுடன் ''எனக்குத் தேவை'' என்ற சிந்தனையுடன், நாம் செய்யும் எந்தக் காரியமும் அதன் அழுத்தமான வாசனையை நம்மிடம் விட்டு விடுகிறது.

இதன் விளைவையே நாம் பாவம் என்றும், புண்ணியம் என்றும் பாதிப்புக்களாகக் கருதுகிறோம்.

மது அருந்தும் ஒருவன், தனக்கு அதற்குரிய சுகம் கிடைப்பதற்காக ''என்னுடைய இன்பத்திற்காக மது அருந்துகிறேன்'' என்ற சிந்தனையுடன் அருந்துகிறான். அது அவனைப் பாதிக்கிறது. அவன் அந்தப் பழக்கத்துக்கு அடிமையாகிறான். அதிலிருந்து அவனால் மீள முடிவதில்லை.

ஒரு கிராமத்தில் இருக்கும் எளிய தாய் ஒருத்தி, தனது குழந்தையைப் பிரசவிப்பதற்காக நகரத்துக்கு வருகிறாள். அங்கே அவளுடைய பிரசவத்தில் இரத்தச் சேதம் ஏற்படுகிறது. உடல் சூட்டை அளிப்பதற்காக டாக்டர் அவளுக்கு ''பிராந்தி'' யைக் கொடுக்கிறார். அவளும் அதைச் சாப்பிடுகிறாள். ஆனால் அவள் அந்தப் பழக்கத்துக்கு அடிமை ஆவதில்லை.

குழந்தையுடன் வீடு திரும்பிய பிறகு ''எங்கே பிராந்தி?'' என்று கேட்பதில்லை.

தனது இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், தவறான

வழியில் பணம் சம்பாதிக்கவும் ஒருவன் கொலை செய்கிறான்,

அந்த வெறிக்கு அவன் அடிமை ஆகிறான்.

வாழ்நாள் முழுவதும் அவன் கொலை வெறி பிடித்தவனாகவே அலைகிறான்.

ஆனால் நாட்டைக் காக்க எல்லைக்குச் செல்லும் போர் வீரன் அங்கே துப்பாக்கியால் எதிரிகளைச் சுட்டு வீழ்த்துகிறான்.

யுத்தம் முடியும் வரையில் தான் அதனைத் தன் கடமையாகச் செய்கிறான்.

அதன் பிறகு ஊருக்குத் திரும்பிய பின்னர் ''யாரைச் சுட்டு வீழ்த்தலாம்?'' என்று அவன் அலைவதில்லை.

நம்முடைய நோக்கம் உயர்ந்ததாக சுயநலமில்லாததாக் இருந்துவிட்டால், நாம் செய்யும் காரியங்களின் வாசனை நம்மைப் பாதிக்காது.

அப்படி நமது கடமைகளைச் செய்யும் போது, நாமே நமது பந்தங்களிலிருந்து விடுபடவும்முடியும்.

ஏற்கெனவே நாம் சேமித்துக் கொண்ட வாசனைகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் கூட நம்முடைய கடமை உணர்வு நிறைந்த செயல்களின் மூலமாக கழித்து விடலாம்!

இந்த இரகசியத்தை இந்து மதம் 'கர்மயோகம்' என்று குறிப்பிடுகிறது.

['இளைஞர்களுக்கான இந்துமதம் என்ற நூலில்]

---

## கடவுள் வராத காரணம்!

''அசுரர்களை ஒழித்துக் கட்டுவதற்காகக் கடவுள் எத்தனையோ அவதாரம் எடுத்திருக்கிறார் என்று கூறுகிறார்கள். அந்த அசுரர்களை விடக் கொடியவர்களாகவும் எண்ணிக்கையில் அதிகமாகவும் இப்போது எவ்வளவோ அசுரர்கள் இருக்கத்தானே இருக்கிறார்கள். கடவுள் ஏன் அவதரிக்கவில்லை?'' என்று சிலர் கேட்கிறார்கள்.

கடவுளுடைய அவதார நோக்கம் — துஷ்ட நிக்கிரகம் மட்டுமல்ல — சிஷ்ட பரிபாலனம் — அதாவது பக்தர்களைக் காப்பதுதான்.

தூணிலிருந்து நரசிம்மன் வெளிவந்து அசுரனான இரண்யனைக் கொன்றார் — எதற்கு?

பக்தனான பிரகலாதனைக் காப்பாற்ற!

இப்போது அசுரர்கள் இருக்கிறார்கள்.

உண்மை.

ஆனால் ஒரு பிரகலாதன் கூட இல்லையே!

அப்படி ஒருவன் இருந்தாலல்லவா கடவுள் அவதரிப்பார்!

★

# "குரு" வைப் போலச் செய்யலாமா?

ஓர் ஆதாரமற்ற, ஆனால் சுவையான கதை உண்டு.

சீடர்கள் சூழ ஆதி சங்கரர் சென்று கொண்டிருக்கும் போது மதுக் கடை ஒன்று வந்தது.

சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்றைச் சங்கரர் செய்தார்.

ஒரு முட்டி கள்ளை வாங்கி மட மடவென்று குடிக்கலானார்.

பிறகு மேலே நடந்தார்.

சீடர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்-

''நாமும் சாப்பிட்டால் என்ன?'' என்ற சபலம்!

உண்மைதானே?

குருவுக்கு ஒரு சட்டம், சீடர்களுக்கு ஒரு சட்டமா?

சிறிது நேரத்தில் ஒரு கருமான் பட்டறை எதிர்ப்பட்டது.

அங்கே ஈயத்தைக் காய்ச்சி உருக்கிக் கொண்டிருந்தார்கள்.

சங்கரர் திரவமாக இருந்த ஈயத்தில் நாலு குவளை மொண்டு மடக் மடக்கென்று அருந்தினார்.

மேலே நடந்தார்.

மறுபடியும் சீடர்கள் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டார்கள்.

இப்போது விஷயத்தைப் புரிந்து கொண்ட அடையாளம் அதில் தெரிந்தது.

அவர்களும் தாராளமாக கள் குடிக்கலாம் — கொதிக்கும் ஈயத்தை அப்படியே விழுங்கும் ஆற்றல் பெறும் கட்டத்தில்!

அறிவை உணர்ச்சி வெல்லுதல் இயல்பு:

O அறிவால் உணர்ச்சியை வெல்லுதல் உயர்வு

# கீதை சொல்வது என்ன?

## மகாகவி பாரதியார்

வேதத்தின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாகவே பகவத் கீதை செய்யப்பட்டது.

ரிக் வேதத்திலுள்ள புருஷஸூக்தம் சொல்லுகிறது "இஃதெல்லாம கடவுள்" என்று.

இந்தக் கருத்தையொட்டியே கீதையிலும் பகவான் "எவன் எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவையும் ஆத்மாவில் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறானோ அவனே காட்சியுடையான்" என்கிறார்.

நீயும் கடவுள், நீ செய்யும் செயல்களெல்லாம் கடவுளுடைய செயல்கள். நீ பந்தத்தில் பிறப்பதும் கடவுளுடைய செயல், மேன் மேலும் பல தளைகளை உனக்கு நீயே பூட்டிக்கொள்வதும் கடவுளுடைய செயல். நீ முக்தி பெறுவதும் கடவுளுடைய செயல்.

"ஆனால் நான் எதற்காகத் தளை நீங்கும்படி பாடுபட வேண்டும்? எல்லாம் கடவுளுடைய செயலாய் இருக்கும் போது முத்தியடையும் படி நான் ஏன் முயற்சி செய்ய வேண்டும்?" என்று ஒருவன் கேட்பானாயின், அதற்கு நாம் கேட்கிறோம்.

"முக்தியாவது யாது"?

எல்லாத் துயரங்களும் எல்லா அச்சங்களும் எல்லாக் கவலைகளும் நீங்கி நிற்கும் நிலையே முக்தி.

அதனை எய்த வேண்டுமென்ற விருப்பம் உனக்கு உண்டாயின் நீ அதற்கு உரிய முயற்சி செய்.

இல்லாவிட்டால் துன்பங்களிலே கிடந்து ஓயாமல் உழன்று கொண்டிரு.

உன்னை யார் தடுக்கிறார்கள்?

ஆனால் நீ எவ்விதச் செய்கை செய்த போதிலும் "அது உன்னுடைய செய்கை இல்லை. கடவுளுடைய செய்கை" என்பதை அறிந்துகொண்டு செய்.

அதனால் உனக்கு நன்மை விளையும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

"ஸர்வம் விஷ்ணுமயம் 'ஜகத் என்பது சநாதன தர்மத்தின் சித்தாந்தம்.

எல்லாம் கடவுள் மயம்.

எல்லாத் தோற்றங்களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும் எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும்,

எல்லாச் சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாச் செயல்களும் — எல்லாம் ஈசன் மயம்.

"ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" என்று ஈசாவாஸ்யோபநிஷத் சொல்லுகிறது.

அதாவது — "இவ்வுலகத்தில் நிகழ்வது யாதாயினும் அது கடவுள் மயமானது" என்று பொருள் படும்.

இந்தக் கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் "இவ்வுலகனைத்திலும் நிரம்பிக் கிடக்கும் கடவுள் அழிவில்லாதது என்று உணர்" என்று சொல்கிறார்.

எனவே, எல்லாம் கடவுள் மயமாய், எல்லாச் செயல்களும் கடவுளின் செயலாக நிற்கும் உலகத்தில், எவனும் கவலைப்படுதலும் துயரப்படுதலும் அறியாமையன்றோ?

"எல்லாம் சிவன் செயல்" என்றால் பின் எதற்கும் நான் ஏன் வருத்தப்பட வேண்டும்?

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவன் செத்து விட்டானோ?"

நட்சத்திரங்கள் எல்லாம் கடவுள் வலியால் சுழல்கின்றன. திரிலோகங்களும் அவனுடைய சக்கரத்தில் ஆடுகின்றன. நீ அவன் உன் மனம், உன் மனத்தின் நினைப்புக்கள் எல்லாம் அவனே. "ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்" — அங்ஙனமாக, மானுடா, நீ ஏன் விணாய் பொறுப்பைச் சுமக்கிறாய்? பொறுப்பையெல்லாம் தொப்பென்று கீழே போட்டுவிட்டு சந்தோஷமாக உன்னால் இயன்ற தொழிலைச் செய்து கொண்டு இரு.

எது எப்படியானால் உனக்கு என்ன? நீயா இவ்வுலகைப் படைத்தாய்? உலகம் என்னும் போது உன்னைத் தவிர்ந்த மற்ற உலகத்தையெலால்ம் கணக்கிடாதே! நீ உட்பட்ட உலகத்தை உனக்கு முந்தியே உன் பூர்வகாரணமாக நின்று உன்னை ஆக்கி வளர்த்துத் துடைக்கும் உலகத்தை மானுடா, நீயா படைத்தாய்?

நீயா இதை நடத்துகிறாய்? உன்னைக் கேட்டா நட்சத்திரங்கள் நடக்கின்றன? உன்னைக் கேட்டா நீ பிறந்தாய்? எந்த விஷயத்துக்கும் நீ ஏன் பொறுப்பை வகித்துக் கொள்ளுகிறாய்?

---

## 'நல்ல நினைப்புத்தான், ஆனால் ...'!

★ தாய் தந்தையர் குழந்தைகளை எவ்வளவுதான் நல்ல முறையில் வளர்க்க விரும்பினாலும் அவைகள் தாய் தந்தையரையே பின்பற்றுகின்றன. ★

ஜெரோம் கே. ஜெரோம்.

உலகப் புகழ் பெற்றவர் ரஜனீஷ் சாமியார்!
வேடிக்கையாகவே பல கதைகளைச் சொன்னவர்!
வேடிக்கைக் கதைகள் மூலம் பல தத்துவக் கருத்துக்களைப் புகுத்தி மக்களைச் சிந்திக்க வைத்தவர்!

# மனிதனின் கடைசி எண்ணம்

— ஓஸோ ரஜனீஷ்

ஒருவன் இறக்கும் தறுவாயிலிருந்தான்!

அவன் கிழவன், வாழ்ந்து முடித்தவன்.

அவன் மரணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை!

சூரியன் மறைவதால் இருள் கவிந்து கொண்டிருந்தது.

அவன் தன் கண்களைத் திறந்து, வலதுபுறம் அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்து ''எங்கே என் மூத்த பையன்?'' என்று கேட்டான்.

மனைவி ''அவன் படுக்கையில் அந்தப் பக்கம் என் முன்னால் இருக்கிறான். அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இந்தக் கணத்தில் எந்தக் கவலையும் வேண்டாம். நிம்மதியாகப் பிரார்த்தனை செய்யுங்கள்!'' என்றாள்.

ஆனால் அந்த மனிதன் ''எங்கே என் இரண்டாவது மகன்''? என்றான்.

மனைவி ''அவன் மூத்த மகனின் அருகிலேயே இருக்கிறான்'' என்றாள்.

இறப்பின் விளிம்பில் இருக்கும் அந்தக் கிழவன் எழ முயற்சித்தான்!

''என்ன செய்கிறீர்கள்'' என்று மனைவி கேட்டாள்.

அவன் ''என் மூன்றாவது மகனைத் தேடுகிறேன்'' என்றான்,

கிழவன் நம்மையெல்லாம் எந்த அளவு நேசிக்கிறான் என்று மனைவி, மகன்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டனர்.

மூன்றாவது மகன் அவன் காலடியில் அமர்ந்திருந்தான்.

அவன் சொன்னான்: ''நான் இங்கு இருக்கிறேன். நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் எல்லோரும் இங்கே தான் இருக்கிறோம்!''

கிழவன் கேட்டான்:

''நீங்கள் எல்லோருமே இங்கே இருக்கிறீர்கள். இந்த நிலையில் நீ என்னை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்கிறாய். யார் கடையைப் பார்த்துக் கொள்வது?''

செத்துக் கொண்டிருந்த அந்தக் கணத்திலும் அவன் கடையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

வெவ்வேறு விதமான மக்களது அடி மனம் எப்படியெல்லாம் வெளிப்படும் என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

அவர்களது முழு வாழ்வும் அவர்களது எதிர்ச் செயலில் பிரதிபலிக்கும் என்ற அளவில் உறுதி கூறலாம்.

ஆனால் ஒவ்வொருவர் வாழ்வும் வெவ்வேறு அனுபவங்களில் நகர்வதால், அவர்களது முடிவுப் புள்ளியானது வெவ்வேறு விதமாகவே இருக்க முடியும்.

மனிதனின் அடிப்படைக் குணாதிசயத்தை மரணம் மேல் மட்டத்திற்குக் கொண்டு வருகிறது.

மற்றொரு கிழவன் இறக்கும் தறுவாயிலிருந்தான்.

அவன் பணக்காரன்.

அவனது குடும்பம் முழுவதும் அங்கு இருந்தது. மூத்த மகன் ''அவர் இறந்தவுடன் நாம் என்ன செய்யலாம்? கல்லறைக்குத் தூக்கிச் செல்ல வாடகைக் கார் ஒன்று எடுக்கலாம்'' என்றான்.

இளைய மகன் ''அவர் எப்போதும் பெரிய சொகுசான குளிரூட்டப்பட்ட விசேட காருக்காக ஏங்கினார். ஏனோ அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை? கடைசியிலாவது அவர் ஒரு வழிச் சவாரியாக கல்லறைக்குப் போவது மட்டுமாவது நல்ல பெரிய ஆடம்பர சொகுசு வாகனமாக இருககட்டும்'' என்றான்,

ஆனால் மூத்தவன் ''நீ சிறியவன், உன்னால் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இறந்தவர்கள் எதையும் அனுபவிக்க முடியாது. இறந்தவனுக்கு அது பெரிய சொகுசு வாகனமா அல்லது சிறிய வண்டியா என்பது தெரியாது. சின்னக்கார் ஒன்று போதும்!'' என்றார்.

இரண்டாவது மகன் ''ஏன் நீங்கள் ஊதாரித்தனம் செய்கிறீர்கள்? ஏதாவது ஒரு வழியில் இறந்த உடலை எடுத்துச் சென்றால் அதுவே போதும். எனக்குச் சவவண்டி வைத்திருக்கும் ஆளைத் தெரியும். அது இன்னும் வசதியாகவும் சிக்கனமாகவும் இருக்கும்'' என்றான்.

மூன்றாவது மகன் ''என்னால் இந்த மடத்தனத்தைச் சகித்து

## பரிபூரண ஞானம்

★ ஆழ்ந்து நோக்கும் போது இறைவனது அருளில் பரிபூரண நம்பிக்கை வைப்பதே மிகச் சிறந்த ஞானம் என்பது புலனாகும். ★

கொள்ள முடியவில்லை. சொகுசு வாகனமா சின்ன வாகனமா என்று ஏன் யோசிக்க வேண்டும். அவர் என்ன கலியாணமா செய்து கொள்ளப் போகிறார்? அவர் இறக்கப் போகிறார். நாம் அவரை வீட்டுக்கு வெளியே குப்பைத் தொட்டி அருகில் போட்டு விடலாம். முனிசிபாலிற்றி வண்டி அவரைத் தானாகவே எடுத்துச் சென்று விடும். செலவே இல்லை!'' என்றான்.

அந்த நேரத்தில் அந்தக் கிழவன் தன் கண்களைத் திறந்து ''எங்கே என் செருப்பு?'' என்றான்.

மகன்கள் எல்லோரும் ''இப்போது செருப்பு எதற்கு?'' என்று கேட்டனர்.

ஆனால் கிழவன் ''என் செருப்பு எனக்கு வேண்டும்'' என்றான்.

மூத்த மகன் ''அவர் பிடிவாதக்காரர். அவரது செருப்புடன் மரணமடைய விரும்புகிறார் போலிருக்கிறது. அவரது செருப்பை அவரே வைத்துக் கொள்ளட்டும் என்றான்.

கிழவன் செருப்பைப் போட்டுக் கொண்ட பின் ''நீங்கள் செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எனக்கு இன்னும் சிறிதளவு வாழ்க்கை பாக்கி இருக்கிறது. நான் கல்லறைக்கு நடந்து போகிறேன். நீங்கள் ஊதாரித்தனமாக இருப்பது எனக்கு வருத்தம் அளிக்கிறது. நான் பெரிய ஆடம்பரமான சொகுசு வாகனம் பற்றிக் கனவு கண்டேன். அழகான வசதியான கார்களைப் பற்றி எல்லாம் கனவு கண்டேன். கனவு செலவு இல்லாதது! எதைப் பற்றி வேண்டுமானாலும் கனவு கணலாம்''

கிழவன் கல்லறைக்கு நடந்தே சென்றான் என்றும், அவன் பிள்ளைகள் சுற்றத்தார் எல்லாரும் அவன் பின்னால் நடந்ததாகவும், பணத்தை மிச்சப்படுத்துவதற்காக அவன் கல்லறைக்குச் சென்ற பின்பே இறந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இறக்கும் தறுவாயிலுள்ள ஒரு மனிதனின் கடைசி எண்ணம் அவனது முழு வாழ்வின், அவனது முழு வாழ்க்கைத் தத்துவத்தின், அவனது முழு மதத்தின் தன்மையை ஒட்டியே அமைகிறது,

அது ஒரு மிகப் பெரிய வெளிப்பாடு. O

---

**செல்வமும் வறுமையும்**

மனத் திருப்தி என்பது இயற்கையாகவே நம்மிடம் இருக்கும் செல்வம்.

ஆடம்பரம் நாமே தேடிக் கொள்ளும் வறுமை.

---

சமயமஞ்சரி — 2. ஆவணி 1995. யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 226ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் தி. ச. வரதராசன். ஆசிரியர்: சு. குமாரசாமி பி. எஸ்ஸி.



# கடிதங்கள்

## நிறைந்த ஆசிகள்

''சமய மஞ்சரி'' படித்து இன்புற்றோம். தெரிந்தெடுத்த கட்டுரைகள் நிறைந்துளது. சிறார், முதியோர் எல்லோரும் வாசித்தின்புறலாம். மகான்களின் அமுத வாக்குகளைச் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. இச் சஞ்சிகை வளர்ந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி ஆசிரியரை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கின்றோம்.

நல்லை ஆதீனம், நல்லூர். — ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்.

## புதிய பொலிவு

அட்டைப்படம், அமைப்பு, உள்ளடக்கம் எல்லாமே கன கச்சிதம்! எல்லோருக்கும் பயன் தரும் நல்ல சஞ்சிகை. விஞ்ஞான நோக்குடன் ஆன்மீக அணுகு முறை புதிய பொலிவு தருகிறது!

— பண்டிதை, பொன். பாக்கியம்
சுளிபுரம்.

## ஆன்மீக ஒளி

அளவு, அழகு, சுவை, நிறைவு, ஆன்மிக ஒளி ஆகியவை அடங்கிய ''சமய மஞ்சரி'' க்கு எனது வரவேற்பும் வாழ்த்துக்களும்.

— சி. நந்தகுமார்
சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு.

## எல்லார்க்கும் பயன் தரும்!

''சமய மஞ்சரி'' மிக நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு இந்துக்களின் வீட்டிலும் இருக்கவேண்டும். எல்லார்க்கும் பயன் தரும் நல்ல விஷயங்கள் நிறைய உள்ளன.

— சிறீதரன்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

## இலக்கியப் பத்திரிகைகளை விட நன்றாக இருக்கிறது!

ஆன்மிக விஷயங்களை ஒரு வகையான நல்ல இலக்கியச் சுவையுடன் ஜனரஞ்சகமான முறையில் மிகச் சிறப்பாகத் தந்திருக்கிறீர்கள்! படிக்கப் படிக்க நான்றாக இருக்கிறது. இலக்கியப் பத்திரிகைகளை விட நன்றாக இருக்கிறது.

— க. சுப்பிரமணியம், அதிபர்.
மானிப்பாய்.

## யாழ்ப்பாணத்தில் இருந்தா?

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்படி ஒரு சஞ்சிகையா? மிகவும நன்றாக இருக்கிறது.

— எஸ். சீவரட்ணம்.
கொழும்பு, 4

# வரதர் வெளியீடுகள்

வித்துவான்
பொன் முத்துக்குமாரன் பி.ஓ.எல்.
எழுதிய

## தமிழ் மரபு

தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்கும்
மாணவர்க்கும் மொழியைப் பிழையின்றி
எழுத விரும்பும் எழுத்தாளர்க்கும்
அருமையான ஒரு கைந்நூல்.

ரூபா. 60/=

வரதர் எழுதிய

## பாரதக் கதை

தமிழ்மக்கள் அனைவரும்
படிக்கவேண்டிய இதிகாசக் கதை
மிகச்சுவையாக எழுதப்பெற்றிருக்கிறது.

விலை ரூபா 80/=